## சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம் - 2021

- **தரம் - 05**
- **வாரம் - 07 (ஜுன் மாத இரண்டாம் செயலட்டை)**

**தயாரிப்பு - எம்பிலிபிடிய கல்வி வலயம்**

---

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01.. கீழ்வரும் பந்தியை வாசிக்குக

குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள் போல் நமக்குத் துன்பம் வந்த போது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர்கள் அல்லர். அந்தக் குளத்திலேயே எப்போதும் சேர்ந்து வாழும் கொட்டி,அல்லி. நெய்தல் போன்ற கொடிகளைப் போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்து கொள்பவர்களே நம் உறவினர்கள் எனக் கூறத்தக்கவர்களாவர்.

பின்வரும் வினாக்களுக்குரிய விடையினை மேலேயுள்ள பந்தியிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

01.. நமக்குத் துன்பம் வந்தபோது விலகிச் செல்பவர்கள் எவற்றைப் போன்றவர்கள் ?..................

.......................................................................................................

02. நீங்கி என்பதன் ஒத்த சொல் எது? ..............................................................

03. இப்பந்தியில் வந்துள்ள உவமைத் தொடர் எது? ................................................

.......................................................................................................

04. இப்பந்தியில் வந்துள்ள இடப்பெயர்ச் சொல் எது? ............................................

05. குளங்களிலேயே என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக. ......................................

02. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்குக.

01.. உள்ள / தேனை / பூக்களில் / உறிஞ்சிக்/ முடியும் ./ மட்டுமே / குடிக்க

.......................................................................................................

02. அனைவரும்/ புத்தாடை / வீட்டிலுள்ள / அணிவோம். / குளித்து

.......................................................................................................

03. பாராட்டுக்கள் /குவிந்த / அவருக்குப்/ வந்து / இருந்தன./ வண்ணம்

.......................................................................................................

04. எழில் / கொஞ்சும் / இயற்கை / கண்டி / நகரமாகும். / நகரமே

.......................................................................................................

03. கீழ்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 01. வேர்வை | : ............................. | 02. கோடாரி | : ......................... |
| 03. வெத்திலை | : ............................. | 04. கைமாறு | : ......................... |

05. வெக்கம் : ..............................
06. தலகணி : .........................
07. சீயக்காய் :................................
08. போயிலை : .........................
09. தீவாளி : ..............................
10. முயச்சி : .........................
11. காச்சல் : ..............................
12. புழமை : .........................

04. இடைவெளியைப் பூர்த்தி செய்க.

01. கரடி உறுமும் என்பது போல ....................... ஊளையிடும்.

02. எழுமிச்சையின் இளையது கன்று என்பது போல் நெல்லின் இளையது ......................

03. புறா குறுகுறுக்கும் என்பது போல ............................ இரையும்.

04. நாய் குரைக்கும் என்பது போல சிங்கம் ..........................................................

05. ...................... இளையது பேத்தை என்பது போல கோழியின் இளையது குஞ்சு.

05. கீழ்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

01. பேரும் ..........................
02. மூலை ................................
03. நீட்டி ............................
04. ஓட்டமும் ..............................
05. குன்றும் ........................
06. உற்றார் ..............................
07. வரவு ...........................
08. குப்பை ................................
09. மலையும் .....................
10. கள்ளங் ..............................
11. பழக்க ........................
12. கண்ட ...............................

06.இடைவெளிக்குப் பொருத்தமான மரபுத்தொடரை அடைப்பிலிருந்து தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

01. நாம் எந்தவொரு காரியத்தையும் ..........................[ ஆறப்போடுதல் / கதைவளர்த்தல் ] கூடாது.

02. அவன் தனது நண்பனின் செயலைக் கண்டு ....................................................... [ தலை கவிழ்தான் / கைதூக்கினான் ]

03. ஒருவரது அறிவு,செல்வம்,முதலியவற்றை அளவிடுதலை [ ஆழம்பார்த்தல் / வாயூறுதல் ] என்பர்.

04. துன்பத்திலிருந்து காப்பாற்றுவதை .......................[ தட்டிக் கொடுத்தல் / கைதூக்குதல் ] என்பர் .

05. அவர் தான் செய்த குற்றத்தை ........................[ தாளம் போட்டார் / பூசிமெழுகினார் ]

06. பிறரை மகிழ்விக்க அவர் கருத்துப்படி நடப்பதை ................................................ [ தட்டிக் கழித்தல் / தாளம் போடுதல் ] என்றழைக்கப்படும்.